## ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்

# தமிழ்நாட்டுக்கு கொடுமையான அநீதிகளை இழைத்து வருகிறது!

## மக்களவையில் கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அடுக்கடுக்கான குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, டிச. 22-**

**“ஒன்றிய பா.ஜ.க. அரசு மாற்றாந்தாய் மனப்பாமையுடன் தமிழ்நாட்டுக்கு கொடுமையான அநீதிகளை இழைத்து வருகிறது’’ என்று நாடாளுமன்ற மக்களவை யில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் கடுமையாக விமர்சனம் செய்தார்.**

இதுகுறித்து மக்களவையில் துணை மானியக் கோரிக்கை மீது கழகக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நடப்பு நிதி ஆண்டின் முதல் துணை மானியக் கோரிக்கையாக ரூ.132000 கோடி கூடுதல் செலவுக்கான நிதி, நிதிநிலை அறிக்கைக்கான அனுமதிபெற்ற ஆறுமாத காலத்திலேயே கோரப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு முக்கிய அம்சங்கள் தான் காரணம் என சொல்லப்படுகிறது. மொத்த கூடுதல் நிதி தேவையில் ரூ 90,812 கோடி அளவுக்கு ஏற்கனவே அனுமதிக்க பட்டுள்ள பல்வேறு துறைகளின் பட்ஜெட் ஒதுக்கீட்டில் இருந்து பெறப்படும் சேமிப்புகள் என்று குறிப்பிட படுகிறது. எனவே, இரண்டாவது அம்சமாக குறிப்பிடப்படுவது என்ன என்றால், நிகர பணத் தேவை ரூ. 41458 மட்டுமே.

இந்நிலையில், ரூ 90812 என்பதை சேமிப்பு என்று சொல்வது எப்படி சரியாகும்? ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்த படவில்லை. அதனை சேமிப்பாக எப்படி கருதிட முடியும். தேவையே இல்லாமல் பட்ஜெட் ஒதுக்கீட்டை பெற்றுள்ளது அரசு. மேலும் , புதிய அல்லது கூடுதல் வருவாய் கிடைத்துள்ளதும் ஒரு காரணம் எனவும் சொல்கிறீர்கள்.

இந்த நிகர கூடுதல் பணத்தேவையில் உர மானியத்துக்கு ரூ18575 கோடியும், பெட்ரோலிய எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.9500 கோடி அளவிலான அதிக மானியமும் அடங்கும். இந்த மானியச் செலவினங்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடந்து வரும் செலவினங்கள். எனவே, இந்த மானியங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை ஏன் அரசினால் துல்லியமாக எதிர்பார்க்க வில்லை?

இவையன்றி, உள்விவகாரத் துறைக்கு ரூ. 2500 கோடி, கல்வி அமைச்சகத்துக்கு ரூ. 1200 கோடி, வெளியுறவுத் துறைக்கு ரூ.1300 கோடி என கூடுதல் தொகைகளும் இந்த ரூ.41500 கோடி துணைமானியக் கோரிக்கைகளில் இடம்பெற்றுள்ளன.

**‘C’ தரக்குறியீட்டை கொடுத்த ஐ.எம்.எப்.!**

இந்த செலவினங்கள் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்த நிலையில் இப்போது வந்து கூடுதல் நிதி ஒதுக்கீட்டுக்கு கேட்பது முறையல்ல. இதனை ஆரம்ப பட்ஜெட்டிலேயே ஏன் சேர்க்கவில்லை என்பதே என் கேள்வி. இது பற்றிய விளக்கத்தை அளிக்க நிதி அமைச்சர் முன் வரவேண்டும்.

துணை மானியக்கோரிக்கை பற்றிப் பேசும் போது சர்வதேசப் பண நிதியம் (இன்டர்நேஷனல் மானிட்டரி ஃபண்ட் ) கூறியுள்ள கருத்துக்கள் குறித்தும் சொல்ல வேண்டும். இந்தியாவின் கணக்கீட்டு முறைகள் சரியாக இல்லை உரிய தரத்தில் இல்லை என சர்வ தேச தேச நிதியம் சுட்டிக் காட்டி இருக்கிறது. நமது பொருளாதாரம் , நிதிநிலைக் கணக்கீடு சார்ந்த வழிமுறைகள் தரக்குறைவாக உள்ள காரணத்தால் இந்திய நிதிநிலைக்கு ‘சி’ என்ற குறைவான தரக்குறியீட்டை ஐ.எம்.எஃப். அமைப்பு கொடுத்திருக்கிறது.

நமது பொருளாதார வளர்ச்சி 10.1 சதவீதமாக இருக்கும் என நீங்கள் சொன்னீர்கள். ஆனால் 8.2 சதவீதம் அளவில் தான் இந்திய பொருளாதார வளர்ச்சி இருக்கும் என ஐ.எம். எஃப். கருதுகிறது. நமது பிரதமரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.2 அளவில் இருக்கும் என்று கூறி விட்டார். ஏன் 2 சதவீதம் அளவுக்கு பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும் நிலை உருவாகி இருக்கிறது? நமது பொருளாதாரம் சரிந்து வருவதால் தான் சர்வ தேச நிதியம் நமக்கு “சி“ குறைவான தரக் குறியீட்டை வழங்கி உள்ளது.

இத்தகைய நிலையை நாம் தான் ஏற்படுத்தி இருக்கிறோம். அதன் பொருட்டே பொருளாதாரம் சார்ந்த அரசின் செயல்பாடுகளை பலரும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன், டாக்டர் அருண்குமார் போன்ற பொருளாதார வல்லுநர்கள் எல்லாரும் இத்தகைய கருத்துக்களை தெரிவித்ததுடன் அரசின் பொருளாதார வளர்ச்சி, கணக்கீடுகள் நம்பத்தகுந்தவை அல்ல என்றும் சொல்கிறார்கள்.



**செஸ் ( தனிவரி) வசூல்**

செஸ் (Cess) என அழைக்கப் படும் தனி வரிவிதிப்பு மூலம் திரட்டப்படும் தொகை குறிப்பிட நோக்கத்துக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே விதிக்க ப் பட வேண்டும். மேலும் அந்த நிதி சம்பந்தப்பட்ட அமைச்சகத்திடம் சேர்க்க ப் பட வேண்டும். ஆனால் அப்படி நிகழ்வதில்லை. உதாரணமாக, கச்சா பெட்ரோலிய எண்ணெய் மீது செஸ் தனிவரி 1975 முதல் ஏறத்தாழ 50 ஆண்டுகளாக வசூலிக்க பட்டு வருகிறது. இது வரை மொத்தம் ரூ.2.98 லடசம் கோடி அளவுக்கு வசூலிக்க பட்டுள்ள நிலையில் வெறும் 902 கோடி ரூபாய் மட்டுமே பெட்ரோலிய அமைச்சகத்தின் வாயிலாக ஆயில் இண்டஸ்ட்ரி டெவலப்மென்ட் போர்டு எனப்படும் எண்ணெய் தொழில் வளர்ச்சி வாரியத்துக்கு தரப் பட்டுள்ளது.

ஆக, எந்த நோக்கத்துக்காக (அதாவது எண்ணெய் உற்பத்தியை பெருக்க) வசூலிக்க பட்டதோ அதற்காக செலவிடப்படவில்லை. புதிய எண்ணெய் திட்டங்களுக்காக செலவிடப்படாததால் இன்று நாம் 80 சதவீதத்துக்கும் மேலாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்கிறோம். இத்தகைய நிதிசார்ந்த ஒழுங்கீனங்களால் தான் ஐ.எம்.எஃப். நம்மை “சி” கிரேடு என மூன்றாம் தரநிலைக்கு தரக்குறைப்பு செய்துள்ளது. செஸ் வரிவசூல் பணத்தை அரசு வேறு செலவினங்களுக்கு பயன்படுத்துகிறது. எப்படி ஒன்றிய அரசின் துறைகளுக்கு சேரவேண்டிய நிதியைத் தரமறுக்கிறார்களோ அதே போல மாநில அரசுகளையும் வஞ்சிக்கின்றனர். காரணம் செஸ் வரிவசூல் தொகையை மாநில அரசுகளுக்கு பங்கிட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மகாத்மா காந்தி ஊரக வேலைத் திட்டம்**

நூறு நாள் வேலைத் திட்டமான இது மகாத்மா காந்தியின் பெயரில் உள்ளதால் இத் திட்டத்தை மாற்றியமைத்து சீர்குலைக்க முயற்சிக்கும் மோசமான நிலை உருவாக்கப் பட்டுள்ளது. 100 நாட்கள் கட்டாயமாக வேலை என்பதை குறைக்க முயற்சிக்கிறது இந்த அரசு. தமிழ்நாட்டில், கடந்த ஆண்டு 30 கோடி மனித நாட்களாக இருந்த வேலை வாய்ப்பு நடப்பு வருடத்தின் 12 கோடி மனித நாட்களாக குறைத்து விட்டது ஒன்றிய அரசு. தமிழ்நாடு அரசு திட்டத்துக்குத் பொருட்கள் வாங்கிய வகையில் ரூ1290 கோடியை ஏற்கனவே செலவிட்டு விட்டது. ஆனால் இந்த தொகையை மத்திய அரசு இதுவரை விடுவிக்க வில்லை..

**ரயில் திட்டங்கள்!**

ரயில் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.31450. ஆனால் தமிழக ரயில் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு வெறும் 301 கோடி ரூபாய் மட்டுமே. அதாவது 1 சதவீதம் கூட இல்லை. வெறும் 0.95 சதவீதம் தான். தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ 1 லட்சம் கோடி அளவுக்கு வரியாக வழங்குகிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி மறுப்பு!**

மதுரை மற்றும் கோவை மாநகர்களுக்கான மெட்ரோ ரயில் திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் நீண்ட தாமதத்துக்கு பின் அனுமதிக்க இயலாது என ஒன்றிய அரசு அண்மையில் திடீரெனக் கூறிவிட்டது. காரணம் இந்த இரு நகர்களின் மக்கள் தொகை 20 லட்சத்தைவிட குறைவாம். இது சரியான காரணமே அல்ல. அவர்கள் சொன்னது 2011 ஆண்டுக்கான மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி ஆகும் .அப்படி எனில் ஆக்ரா, இந்தூர், புவனேஸ்வர், நவி மும்பை உள்ளிட்ட நகர்களில் எப்படி மெட்ரோ ரயில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன? இந்த நகர்களுக்கு மக்கள்தொகை அளவீடு நிபந்தனை அவசியம் இல்லையா? இத்தகைய திட்டங்களில் மக்கள் தொகையை பார்க்க வேண்டுமா? அல்லது லாப சாத்தியக் கூறினை கணக்கில் கொள்வதா? நீங்கள் பார்க்கும் பார்வை மோசமானதாக உள்ளது.

அதைப் போல பூந்தமல்லி சென்னை போரூர் இடையிலான பத்து கிலோமீட்டர் தூர மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவடைந்து , பாதுகாப்பு ஆய்வுகளும் முடிந்து விட்ட பிறகும் ரயில்களை இயக்க தேவையான அனுமதியை ரயில்வே துறை வழங்காமல் இழுத்தடிக்கிறது. இது மிக மோசமான அணுகு முறை. இப்படித் தான் தமிழகத்தை ஒன்றிய அரசு நடத்துகிறது.

**நெல் ஈரப்பதத்தை அதிகரிக்க மறுப்பு.**

மற்றும் ஒரு முக்கியமான பிரச்சினை நெல்லின் ஈரப்பதம் தொடர்பானது. செப்டம்பர் மாதத்திலேயேநெல் அறுவடைக்குத் தயாராக விவசாயிகள் இருந்த நிலையில் மழைகாரணமாக அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்ட போதிலும், அதனையும் சமாளித்து அறுவடையை முடித்து களத்துக்கு கொண்டு சேர்த்தனர். எனினும், நெல்மணிகளில் ஈரப்பதம் மிகவும் கூடிப் போனது. ஒன்றிய அரசு, கொள்முதல் செய்யப் படும் நெல்லில் 17 சதவீதம் ஈரப்பதத்தை த்தான் ஏற்கும் நிலையில் அதனை 22 சதவீதமாக உயர்த்திடக் கோரி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிரதமருக்கு பல கடிதங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், ஒன்றிய அரசு முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்கவில்லை. இந்த நிலை தஞ்சை டெல்டா மட்டுமல்ல. காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் இதே நிலைதான். இப்படியான சூழலில் அடுத்த ஓரிரு மாதங்களில் அங்கே தஞ்சை செல்ல உள்ள பிரதமர் எப்படி வரவேற்கப் படுவார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**மறுக்கப்படும் கல்வி நிதி.**

ஒன்றிய அரசு சாமக்ர சிக்சா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூ.3458 கோடியை இன்னும் தரவில்லை. ஏன் நீங்கள் இந்த பணத்தை விடுவிக்க வில்லை? புதிய கல்விக் கொள்கைதனை தமிழ்நாடு ஏற்க வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள். நாங்கள் ஏன் புதிய கல்விக் கொள்கையை ஏற்க வேண்டும்? அது ஒரு சட்டம் அல்ல. மாநிலமும் மத்திய அரசும் மாறுபட்ட கல்விக் கொள்கைகளை கொண்டிருக்க முடியும். அது சட்டமல்ல. கொள்கை மட்டுமே. எனவே உங்கள் கொள்கையை பின்பற்ற வேண்டும் என எப்படி நீங்கள் மாநிலங்களை வலியுறுத்த முடியும்? நாங்கள் ஒருநாளும் இதை ஏற்க மாட்டோம். என்றும் நாங்கள் தமிழ் நாட்டில் இந்தியை ஏற்க மாட்டோம். இந்தித் திணிப்பை தொடர்ந்து எதிர்ப்போம்.

**பணியில் உள்ள ஆசிரியர்களை தகுதித் தேர்வு எழுதச் சொல்வது முறையா?**

23.8.2010 க்கு முன்னரே நியமிக்கப்பட்ட 4 லட்சம் பள்ளி ஆசிரியர்கள் மீண்டும் தகுதித் தேர்வு ( TET) எழுதித் தேர்ச்சி பெற்றால் தான் பணியில் தொடர்ந்து இருக்க முடியும் என்ற கொடுமையான நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் நீதி மன்றத் தீர்ப்பு. பணியில் சேர்ந்து 15 ஆண்டுகள் கழிந்த நிலையில் லட்சக்கணக்கான ஆசிரியர்களின் நிலை கேள்விக்குறி ஆகி விட்டது. எனவே இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வு காண ஒன்றிய அரசு மீண்டும் நீதிமன்றத்தை அணுகி உரிய ஆணைப் பெற்று ஆசிரியர்கள் தகுதித் தேர்வு எழுதுவதில் இருந்து விலக்கு பெற வேண்டும், அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுக்க வேண்டுமென என அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு, மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் உரையாற்றினார்.

---

## ஊமையாகிப்போன பா.ஜ.க. மோடி அரசு

# அமெரிக்காவுடன் வர்த்தகப் போர் நடத்த தயக்கம்!

## ‘’தினகரன்’’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, டிச. 21-*

*அமெரிக்காவுடன் வர்த்தகப் போர் நடத்த பா.ஜ.க. அரசுக்கு தைரியம் இல்லை எனவும் ஊமையாகி நிற்கின்றார் பிரதமர் மோடி எனவும் “தினகரன்” நாளேடு விமர்சித்துள்ளது. இதனால் பாதிக்கப்படுவது உள்நாட்டு ஏற்றுமதியாளர்களே என வருத்தம் தெரிவித்து தலையங்கம் எழுதியுள்ளது.*

*அது வருமாறு:-*

*அமெரிக்க வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விரைவில் களைய வேண்டும் என பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அமெரிக்காவின் வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதி துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பல லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது. வரி விதிப்பு காரணமாக திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.15 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்தியா மீது விதித்த 50% வரி ஆகஸ்ட் 27 அன்று நடைமுறைக்கு வந்தது.*



தினகரன்

டிசம்பர் 20, 2025 சனிக்கிழமை

மவுனம் கலையட்டும்

அமெரிக்க வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விரைவில் களைய வேண்டும் என பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அமெரிக்காவின் வரி விதிப்பால் தமிழகத்தில் ஏற்றுமதி துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பல லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளது. வரி விதிப்பு காரணமாக திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு ரூ.15 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

*இந்த விவகாரத்தில், மாறாக உள்நாட்டில் பாதிப்பை சந்தித்து கொண்டிருக்கும் ஏற்றுமதியாளர்களை காப்பாற்ற ஒன்றிய பா.ஜ. அரசு நடவடிக்கை எடுக்காமல் உள்ளது. அமெரிக்காவின் 50% வரி விதிப்பால், ஜவுளி, ரத்தினங்கள், ஆபரணங்கள், தோல் பொருட்கள், கடல் உணவு, ரசாயனங்கள் போன்ற தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதிகள் சரிந்து, வேலை இழப்புகள் ஏற்பட்டு, ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவிடமிருந்து, இந்தியா எண்ணெய் வாங்குவதை கண்டித்து இந்த வரி விதிக்கப்பட்டுள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.*

*அமெரிக்காவின் இந்த நீடித்த 50% வரி விதிப்பு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 0.8% வரை குறைக்கலாம் என பொருளாதார நிபுணர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். மேலும், இந்த நிதியாண்டில் இந்தியாவின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 35 பில்லியன் டாலர் வரை குறையலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளனர். முக்கிய தொழில்களில் லட்சக்கணக்கான வேலைகள் ஆபத்தில் உள்ளன. இதைத்தான், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், பிரதமர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டு காட்டியுள்ளார்.*

*முரண்டு பிடிக்கும் அமெரிக்காவுக்கு, வர்த்தகரீதியாக இந்தியா பதிலடி கொடுக்கவேண்டிய காலக் கட்டம் எழுந்துள்ளது. ஆனால், இந்தியா அமைதி காப்பது, இந்திய தொழில்துறையை விளிம்பு நிலைக்கு தள்ளுகிறது. கடந்த காலத்தை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொண்டால், இந்தியா பதிலடி கொடுப்பதற்கு தயங்கியதில்லை. 2019ல், வாஷிங்டன் எஃகு மற்றும் அலுமினியத்திற்கு உயர் வரிகளில் இருந்து இந்தியாவிற்கு விலக்களிக்க மறுத்தபோது, பாதாம் மற்றும் ஆப்பிள் உட்பட 28 அமெரிக்க பொருட்கள் மீது இந்தியா கடுமையான வரிகளை விதித்தது. அப்போது, இந்தியா எடுத்த அடையாள நடவடிக்கைகள் புத்திசாலித்தனமானது என உலக நாடுகள் பாராட்டின.*

*அதுபோன்ற வர்த்தகப் போரை இம்முறை தீவிரப்படுத்த இந்தியா தயங்குகிறது. ஒன்றிய பா.ஜ., அரசு இப்படி தயக்கம் காட்டுவது, நாட்டின் நலன்களுக்கு உகந்ததல்ல என்றும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். அமெரிக்காவுக்கான இந்தியாவின் பொருட்கள் ஏற்றுமதி, அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மதிப்பைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம் ஆகும். நம் ஏற்றுமதி அதிகளவில் இருப்பதால், வர்த்தக ரீதியிலான பதிலடி கொடுத்தால், 2019ம் ஆண்டுபோல் அமெரிக்கா தனது பிடியை தளர்த்தும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, ஒன்றிய அரசு தனது மவுனத்தை கலைத்து தீர்க்கமான முடிவு எடுத்து, இந்திய தொழில்துறையை காக்க முன்வர வேண்டும். அமெரிக்க வரிகளுக்கு எதிரான சிறந்த தற்காப்பு, ஏற்றுமதி சந்தைகளை பன்முகப்படுத்துவது ஒன்றிய பா.ஜ.க. அரசின் கடமையாகும்.*

*இவ்வாறு “தினகரன்” தலையங்கம் கூறியுள்ளது.*




திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் கழக பொதுச்செயலாளர், இனமானப் பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, அவர்களது திருவுருவப்படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் மாநில மருத்துவ அணை துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி.க.புகழேந்தி, சி.எஸ். சண்முகம், லயன் பா.ஷெரீப், சு.ராஜாங்கம் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. சண்முகநாதன்

**டிசம்பர் 21 (2021)**



**இளமைப் பருவத்திலிருந்தே முத்தமிழறிஞர் கலைஞர்மீது மாறா அன்பு கொண்டு, அவர் மறையும் காலம்வரை அவர் ‘நிழலாக’ வாழ்ந்தவர். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மாற்றுக் கட்சி ஆட்சியாளர்கள் தன் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்கு உத்தரவிட்டாலும் கலைஞர் அவர்களின் அருகிலேயே இருந்தவர். குடும்பத்தாரைவிட அதிக நேரம் கலைஞர் அருகில் இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**கலைஞரின் மனம் நினைப்பதை, உதடுகள் உச்சரிப்பதற்கு முன்பாகவே நிகழ்த்தி முடிப்பவர். கலைஞரின் மனக்குரலை – மனதின் எதிரொலியை எழுத்து வடிவத்தில் மொழிபெயர்க்கக் கூடியவராக இருந்தவர். “இந்தப் பிறவியே கலைஞருக்கானது” என்று சொல்லி, அரைநூற்றாண்டு காலம் கலைஞரின் உதவியாளராக இருந்ததோடு, அவரின் அன்புக்குரியவராகி, அவருக்குச் சுமைதாங்கியாக – இடிதாங்கியாக இருந்தவர்.**

**“நான் உறைந்து நிற்கிறேன். அவரின் அன்றலர்ந்த முகம் தவிர வேறெதுவும் என் மனதில் தோன்றவில்லை. உடன்பிறவா அண்ணனே.. உடன்பிறப்புகளின் தலைவரிடம் சென்றுவிட்டவரே! எங்களில் நீங்கள் என்றென்றும் வாழ்கிறீர்கள். எங்கள் ‘இயக்க’த்தில் நீங்கள் குருதியோட்டமாகக் கலந்திருக்கிறீர்கள்.” என்று கழகத் தலைவர் அவர்கள் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

## தலைமைக் கழகம்

## தி.மு.க.